
2023 ஏப்பிரல் – ஜூன்

# அயலவர்










Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் பணிப்புரையின் பேரில் குறைந்த வருமானமுடையோர்க்கு அரிசி மானியம்



அதிமேதகு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் பணிப்புரையின் பேரில், நாடளாவிய ரீதியில் குறைந்த வருமானமுடைய குடும்பங்களை அபிவிருத்தி செய்யும் அரச வேலைத்திட்டங்களுக்கு இணையாக, யாழ் பிரதேச மக்களிடையே அரிசிப் பொதிகளை வழங்கும் நிகழ்வொன்று முன்னெடுக்கப்பட்டது. இதற்காக ஜனாதிபதி பணிக்குழு பிரதானியும் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகருமான திரு. சாகல ரத்நாயக்க,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்றொழில் அமைச்சர் – கௌரவ. டக்ளஸ் தேவானந்தா, சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் – அனுப பாஸ்குவல் மற்றும் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் விகும் லியனகே ஆகியோர் யாழ் குடாநாட்டிற்கு ஏப்ரல் 23 திகதி விஜயம் மேற்கொண்டனர். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு குடும்பத்திற்கும் மாதம் தலா 10 கிலோ அரிசி வழங்கப்படும். குறித்த அரிசி மானியம் 2 மில்லியன் குடும்பங்களுக்கு மாத்திரமே வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆனால் ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய 2.9 மில்லியன் குடும்பங்களுக்கு குறித்த அரிசி மானியம் வழங்கும் நிகழ்வு விரிவுபடுத்தப்பட்டது, எனும் விடயம் குறிப்பிடத்தக்கதாகும். எதிர்வரும் காலங்களில் ஏனைய மாவட்டங்களிலும் இத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இராணுவத் தளபதியின் அறிவுறுத்தலின் பேரில், இலங்கை இராணுவ விவசாயம் மற்றும் கால்நடைப் படையணியினால் நிர்வகிக்கப்படும் பண்ணைகளிலிருந்து 10,000 கிலோ அரிசியை இந்த மகத்தான திட்டத்திற்கு இராணுவம் நன்கொடையாக வழங்கியது. இதன்படி, வேலனை மற்றும் தெல்லிப்பளை பிரதேச செயலகங்களில் இரண்டு தனித்தனியான மானியம் வழங்கும் வைபவங்கள்



இடம்பெற்றதுடன், அந்த அரிசிப் பொதிகள் திரு. சாகல ரத்நாயக்க உட்பட்ட அதிதிகளால் மக்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டன.

இதன்போது, இராணுவத் தளபதி இந்நிகழ்விற்கு வருகை தந்த பிரமுகர்களுடன், யாழ்ப்பாணம் மயிலட்டியில் இவ்வருடம் பெப்ரவரி மாதம் இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட காணிகளையும், அந்தக் காணிகளில் மீள்குடியேற்ற முன்னேற்றங்களையும் பார்வையிட்டார்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ தளபதியுடன் முஸ்லிம் இராணுவ உறுப்பினர்களின் 'லயா பீச்' ஹோட்டலில் இடம்பெற்ற "இப்தார்" நிகழ்வு





இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகே அவர்களுடன் இராணுவ அதிகாரிகள் மற்றும் சிப்பாய்களின் பங்குபற்றலில், இஸ்லாமிய "இப்தார்" நிகழ்வு ஏப்ரல் 19ம் திகதியன்று வாத்துவ "லயா பீச்" ஹோட்டலில் இடம்பெற்றது.

இப்தார் தொழுகையின் பின்னர், இந்நிகழ்விற்கான வரவேற்பு உரையை இராணுவ இஸ்லாமிய சம்மேளனத்தின் தலைவர் ஆற்றியதோடு, மௌலவி, மதிப்புக்குறிய அப்துல்லா மொஹிதீன் அவர்களால் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் சொற்பொழிவு ஆற்றப்பட்டது. இந்த சொற்பொழிவின் மூலம் இப்தார் என்றால் என்ன? இது வாழ்க்கையின் நடத்தையுடன் எவ்வாறு தொடர்புடையது? என்பதை அவர் தெளிவாக விளக்கினார். அதே வேளையில், இந்த நிகழ்வில் "இப்தார்" சொற்பொழிவினை நடாத்திய இருவருக்கும் இராணுவத் தளபதி பரிசுகளை வழங்கினார். இலங்கை இராணுவத்தின் முஸ்லிம் இராணுவ அதிகாரிகள் மற்றும் வீரர்களின் கூட்டமைப்பினால் உருவாக்கப்பட்ட இராணுவ முஸ்லிம் சங்கத்தினரால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வின் மூலம் நாட்டின் முன்னேற்றத்திற்கும் சௌபாக்கியத்திற்கும் பிரார்த்தனைகள் செய்யப்பட்டன.

# முதலாம் படையினரின் "இப்தார்" கொண்டாட்டம்




முதலாம் படைத் தளபதி, கிளிநொச்சியில் வசிக்கும் முஸ்லிம்கள் மற்றும் படையினருடன் கிளிநொச்சி ஜும்மா பள்ளிவாசலில் வெள்ளிக்கிழமை ஏப்ரல் 21 திகதி நோன்பு துறக்கும் "இப்தார்" நிகழ்வில் கலந்து கொண்டார். உலகலாவிய ரீதியில் முஸ்லிம்களால் கடைப் பிடிக்கப்படும் இப்தார் நிகழ்வில் ஒருமைப்பாடு மற்றும் நல்லெண்ணத்தை அடையாளபடுத்தும் முகமாக இராணுவத்தினர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# 2 வது (தொ) கஜபா படையினர் "இப்தார்" கொண்டாடினர்




2 வது (தொ) கஜபா படையணி படையினர், திருகோணமலை நகரில் வசிக்கும் 50 முஸ்லிம்களுக்கு சுவையான உணவு மற்றும் பானங்களை வழங்கி நோன்பு துறக்கும் (இப்தார்) நிகழ்வினை நடாத்தினர். திருகோணமலை பிரதேசத்தில் வாழும் அனைத்து இன சமூகங்களுக்கிடையில் நல்லெண்ணம், ஒத்துழைப்பு மற்றும் நல்லிணக்க உணர்வுகளை ஊக்குவிக்கும் எண்ணத்துடன் இந்நிகழ்வு குறித்த படையணி தலைமையகத்தில் ஏப்ரல் 18 ம் திகதி முன்னெடுக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சிங்கள புத்தாண்டு கொண்டாட்டங்கள்.

**இனங்களுக்கிடையே கலாச்சார சமூக ஒருமைப்பாட்டை மேம்படுத்தும் வகையில் தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டு கொண்டாட்டங்கள் பல இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்டன.**






பாதுகாப்பு படை தலைமையக (யாழ்) தளபதியின் தலைமைத்துவத்தின் கீழ் தமிழ் சிங்கள புத்தாண்டு கொண்டாட்டம் ஒன்று 2023 ஏப்ரல் 10ம் திகதியன்று யாழ் படைத் தலைமையக விளையாட்டரங்கில் இடம்பெற்றது.



இராணுவத்தின் தலைமையில் 2023 ஏப்ரல் 15ம் திகதி துரையப்பா மைதானத்தில் புதுவருட கொண்டாட்டங்கள் இடம் பெற்றன.




பலலை பொது மைதானத்தில் இராணுவத்தின் ஒருங்கிணைப்பில் 2023 ஏப்ரல் 10ம் திகதி புது வருட கொண்டாட்டங்கள் இடம்பெற்றன.







மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் 2023 ஏப்பிரல் 30ம் திகதியன்று புத்தாண்டு கொண்டாட்டங்கள் இராணுவத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றன.

முல்லைத்தீவு

தமிழ் சிங்கள மரபுகளுக்கு முன்னுரிமை கொடுக்கும் வகையில் 2023 ஏப்ரல் 22 ம் திகதியன்று புதுகுடியிருப்பு பிரதேச சபை மைதானத்தில் முல்லைத்தீவு பாதுகாப்பு படைத்தலைமையக தளபதியின் தலைமையில் புத்தாண்டு கொண்டாட்டங்கள் இடம்பெற்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காம பாத யாத்திரையை மேற்கொண்ட பக்தர்களுக்கு இராணுவத்திடமிருந்து உபசாரங்கள்.






ஒவ்வொரு வருடமும் தென்னிலங்கையின் கதிர்காம ஆலய திருவிழாவில் பங்குபற்றுவதற்கு எதிர்பார்த்து யாழ். குடாநாட்டில் இருந்து பக்தர்கள் பாத யாத்திரையை மேற்கொள்கின்றனர். இவ்வாறாக இவ்வருடம் கதிர்காம பாத யாத்திரையை மேற்கொண்ட பக்தர்களுக்கு யாழ். பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் 552 காலாட் படையினரின் ஏற்பாட்டில் மே 9ம் திகதி ஆனையிறவுப் பகுதியைக் கடந்து சென்ற பக்தர்களுக்கு குளிர்பானங்கள், உணவு மற்றும் மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டன.



புல்மோட்டை

யாழிலிருந்து வருடாந்தம் கதிர்காம பாத யாத்திரையை மேற்கொள்ளும் பக்தர்கள் மே 16ம் திகதியன்று புல்மோட்டை பிரதேசத்தை கடந்து சென்றனர். அச்சமயம் 20 வது கஜபா படையணி படையினர், சமைத்த உணவு, குடிநீர், மருத்துவ உதவிகள், தங்குமிட வசதிகள் என்பவற்றை குறித்த பிரதேசத்தில் பக்தர்களுக்கு வழங்கினர்.

முல்லைத்தீவு

வருடாந்த கதிர்காம திருத்தலத்திற்கு பாத யாத்திரை மேற்கொள்ளும் இந்து பக்தர்கள் கடந்த மே 07ம் திகதி முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயிலுக்கு இளைப்பாறுவதற்காக வருகை தந்திருந்த போது இராணுவத்தினர் 80 பக்தர்களுக்கு சுவையான பகலுணவை வழங்கினர்.



# 37 வது வருட "கந்தூரி" விழா கொண்டாட்டம்






கரீப் நவாஸ் அறக்கட்டளையினால் நடாத்தப்படும் 37 வது வருட கந்தூரி விழா 2023 மே 17 காத்தான்குடி குவாஜி மஜ்லிஸ் மண்டபத்தில் நடைபெற்றது. அறக்கட்டளையின் அழைப்பின் பேரில் கிழக்கு பாதுகாப்புப் படைத் தலைமையக தளபதி மேஜர் ஜெனரல் சுஜீவ ஹெட்டியாரச்சி அவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறாக நினைக்காதே!

ஒரு ஆற்றங்கரையில் இரண்டு பெரிய மரங்கள் இருந்தன. அவ் வழியாக வந்த ஒரு சிட்டுக்குருவி ஒரு மரத்திடம், "மழைக்காலம் தொடங்க இருப்பதால் நானும் என் குஞ்சிகளும் வசிக்க கூடு கட்ட அனுமதிக்க முடியுமா" என்று கேட்டது. முதல் மரம் "முடியாது" என்றதும், இரண்டாம் மரத்திடம் கேட்டது. அந்த மரம் அனுமதித்தது.

குருவி கூடு கட்டி சந்தோஷமாக வாழ்ந்து வந்தது. ஒருநாள் பலத்த மழை. ஆற்றில் வெள்ளம் வந்து முதல் மரத்தை இழுத்துச் சென்றது. தண்ணீரால் இழுத்துச் செல்லப்படும் மரத்தை பார்த்து குருவி சிரித்துக் கொண்டு "நான் வசிப்பதற்கு கூடு கட்ட இடம் இல்லையென்று சொன்னதால் இப்போது நீ தண்ணீரில் அடித்துச் செல்லப்படுகிறாய்" என்றது.

அதற்கு அந்த மரம் "குருவியே, நான் வலுவிழந்து விட்டதால் இந்த மழையை என்னால் தாங்க முடியாது, என்பதை நான் அறிந்திருந்தேன். 'நீயும் உன் குழந்தைகளும் சுகமாக வாழ வேண்டும்' என்பதற்காகவே நான் உனக்கு கூடு கட்ட இடமளிக்கவில்லை. என்னை மன்னித்துவிடு" என்றது.

**உங்களை யாரும் நிராகரித்தால் அவர்களை தவறாக நினைக்காதீர்கள்.**

P. பஜினா - முகாமைத்துவ உதவியாளர்,
பிரதேச செயலகம் - புத்தளம்

# அல்லி முன்பள்ளி

உலகில் தேடித்தேடி
அலைந்தாலும் மீண்டும்
அமர முடியாத சிம்மாசனம்
முன்பள்ளியே..!

எங்கள் சிறார்களின்
ஏற்றமிகு வாழ்விற்கு
ஊதியம் பாராது
உழைக்கும் உங்கள் பணி..!

பிள்ளைப்பருவ மேம்பாட்டோடு
பெற்றோர்கள் ஒருங்கிணைந்து
மழலைச் செல்வங்களின் எதிர்கால
வளர்ச்சியை நிலைநாட்டும் பணி..!

நாளை விடியலுக்கு
நம்பிக்கை நட்சத்திரங்களை
நாளாந்தம் உருவாக்கி
பாலை நிலத்தில் நீர்த்துளியாய்
பாய்ந்தோடச் செய்யும் பணி...!

உ. இரஞ்சனி
முன்பள்ளி ஆசிரியர்
பரசன்குளம்

# நம்பிக்கை...

எல்லோரும் பயணிக்கிறார்கள் என்று நீயும் பின்தொடராதே. உனக்கான பாதையை நீயே தேர்ந்தெடு. எத்தனை கைகள் உன்னை தள்ளிவிட்டாலும் உன் நம்பிக்கை உன்னை ஒருபோதும் கைவிடாது.

சூரியகுமார் சுஜிதரன்
பரசன்குளம்

# இனிமையான சந்திப்புகள்.




யாழ்ப்பாணம் பாதுகாப்பு படை தலைமையக தளபதி மேஜர் ஜெனரல் சுவர்ண போதொட்ட 2023 ஏப்ரல் 06 ம் திகதி யாழ் பல்கலைக்கழக துணை வேந்தர், பேராசிரியர் சிவகொழுந்து ஸ்ரீ சற்குணராசா அவர்களை சந்தித்து சுமுக கலந்துரையாடலில் ஈடுபட்டார்.




515 வது காலாட் பிரிகேட் தளபதி பிரிகேடியர் துஷார பெர்னான்டோ, யாழ். ஆயர் வண. ஜஸ்டின் பெர்னாண்டோ ஞானப்பிரகாசம் அவர்களை ஏப்ரல் 09 நேரில் சந்தித்தார். இந்த சந்திப்பின் போது இராணுவ அதிகாரி தனது ஈஸ்டர் வாழ்த்துக்களை ஆயருக்கு தெரிவித்து கொண்டதுடன், யாழ் ஆயருடன் சுமுக கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.




64 வது காலாட் படைப்பிரிவின் அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் பணிபுரியும் அரச மற்றும் தனியார் நிறுவன பிரமுகர்கள் மற்றும் வணிக பிரமுகர்களை குறித்த படைப்பிரிவு வளாகத்திற்கு 2023 ஏப்ரல் 11 திகதி பகல் விருந்துபசாரமொன்றிற்காக இராணுவத்தினால் வரவழைக்கப்பட்டிருந்தனர். மேஜர் ஜெனரல் நிஷ்ஷங்க ஈரியகமகே தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் ஒட்டுச்சுட்டான் பிரதேச செயலாளர் டீ. ஜயராணி, உதவி செயலாளர் திரு. ஆர் ரமேஷ் ஒட்டுச்சுட்டான் பொலிஸ் நிலையத்தின் பிரதான பொலிஸ் பரிசோதகர் திரு. ரஞ்சித் பமுணுசிங்க, ஒட்டுச்சுட்டான் பிரதேச வைத்தியசாலையின் வைத்தியர்கள், அதிபர்மார்கள், வங்கி முகாமையாளர்கள், மற்றும் வணிக பிரமுகர்கள் உட்பட 30 பேர் கலந்து கொண்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை இளைஞர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு






௨௨ வது காலாட் படைப்பிரிவு தளபதியின் எண்ணக்கருவிற்கேற்ப ௨௦௨௩ ஆம் ஆண்டு மார்ச் 11 ஆம் திகதி திருகோணமலை "ரொட்ரி கழகத்தின்" ஆதரவுடன் ௨௨ வது காலாட் படைப்பிரிவு தலைமையகத்தில் விழிப்புணர்வு கருத்தரங்கு ஒன்று இடம்பெற்றது. இக்கருத்தரங்கின் நோக்கம் அப்பகுதி இளைஞர்கள், குறிப்பாக பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்கள் எதிர்காலத்தில் சமூக விரோதிகளாக மாறாமல் நன்கு திட்டமிடப்பட்ட தொழில் இலக்கை நோக்கி வழிநடத்துவதாகும்.

௨௨ வது காலாட் படைப்பிரிவின் தளபதி அவர்களின் வழிகாட்டலின் பேரில் இந்த கருத்தரங்கு ; திருகோணமலை திறன் மேம்பாடு, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகள் அமைச்சின் தேசிய தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை மையத்தின் நன்கு அறியப்பட்ட தொழில்முறை தொழில் ஆலோசகர் , திருமதி. சந்திமா ரொட்ரிகோ அவர்களால் நடாத்தப்பட்டது. இக்கருத்தரங்கில் 150க்கும் மேற்பட்ட பாடசாலை கல்வியை முடித்தவர்கள் மற்றும் வேலை தேடுபவர்கள் கலந்து கொண்டனர்.

# இராணுவத்தினர் கும்புறுப்பிட்டி அடர்ந்த காட்டில் சிக்கித் தவித்த நால்வரை மீட்டனர்.

17 வது இலங்கை தேசிய பாதுகாவலர் படையினர் நள்ளிரவு மடுவான்குளம் மற்றும் பூனையாறு காடுகளில் காணாமல் போன நான்கு பேரை 9 மே ௨௦௨௩ திருகோணமலை கும்புறுப்பிட்டி காட்டில் இருந்து மீட்டுள்ளனர்.




மே 8ம் திகதி பிற்பகல் விறகு மற்றும் பாலை பழங்கள் சேகரிப்பதற்காக சென்ற நால்வர் காட்டில் வழி தவறி சிக்கித்தவித்துள்ளனர். குறித்த தகவலை உறவினர் பொலிஸிடம் அறிவித்தனர். கும்புறுப்பிட்டிய பொலிஸார் அவர்கள் இருக்கும் இடத்தைக் கண்டறிய ௨௨1 வது பிரிகேட் தலைமையகத்தினரின் உதவியை நாடியதை தொடர்ந்து 17 வது இலங்கை தேசிய பாதுகாவலர் படையணியின் படையினர் குழு கிராம மக்களின் உதவியுடன் மாலை தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர். படையினர், இரவோடு இரவாக மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் மூலம், காணாமல் போன மூன்று பெண்களும் ஒரு ஆணும் கண்டுபிடித்து செவ்வாய்க்கிழமை மே 9ம் திகதி அதிகாலை அவர்களது கிராமத்திற்கு அழைத்து வந்தனர்.

## தேசப்பற்று

மகாவலி பாய்வது இந்நாடே
மாணிக்கம் விளைவதும் இந்நாடே
பாவலர் இசைப்பதும் இந்நாடே
பவளம் நிறைந்ததும் இந்நாடே

செந்தமிழ் வாழ்வதும் இந்நாடே
சிங்களம் வாழ்வதும் இந்நாடே
ஆழ்கடல் சூழ்ந்ததும் இந்நாடே
அகிம்சை வாழ்வதும் இந்நாடே

மலைகள் உயர்ந்ததும் இந்நாடே
வயல்கள் நிறைந்ததும் இந்நாடே
தேயிலை வளர்வதும் இந்நாடே
தென்குகள் நிமிர்வதும் இந்நாடே

தேசப்பற்றுடன் எஸ் சுஜானா

## காணவில்லை...

"சார்.. சார்... என் பொண்டாட்டிய காணோம்"

"யோ இது போஸ்ட் ஆபிஸ்"

'ஐயோ சந்தோஷத்துல எங்க போறதுன்னே தெரியலையே..!"




எம். அபிஷன்
மருதானை இந்து வித்தியாலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மா

அம்மா எனும் மூன்றெழுத்து
அன்பு எனும் மூன்றெழுத்தைக்
குறிக்கும்.
கருவினில் எனை சுமந்து உன்
கஷ்டங்களை பொறுத்து
கண்ணியமாய் நான் வாழ
வழிவகுத்தாய் – நீ.
அன்பால் உணவூட்டுவாய்
அரவணைக்க என்னை அழைப்பாய்.
அம்மா இல்லாத பிள்ளையும் உயிர்
போன உடலும் ஒன்றடி.
என் இதயத்தில் நீங்கா அலை நீயே..!
என் வாழ்விற்கு ஒளி கொடுத்த
விளக்கும் நீயே..
உலகமெல்லாம் உன்னைப் போற்றிட,
என் உள்ளமெல்லாம் நீ நிறைந்திட,
உன் கருவறையில் நான்
புரண்டிருந்தேன்.
இன்று நீயோ என் இதயவறையில்
புரளுகிறாய்....

இர. பிரதியுஷா

## அழகிய பெண்மணி

காலம் முழுவதும் உன்னை
வயிற்றிலும்,மடியிலும், தோளிலும்,
மார்பிலும் சுமப்பவள் தாய் மட்டுமே..!
அவளை என்றும் மனதில் சுமப்போம்.

ஆயிரம் விடுமுறை வந்தாலும்
அவள் அலுவலகத்திற்கு மட்டும்
விடுமுறையில்லை.. இன்ப துன்பங்கள்
எது வந்தபோதிலும் அணைத்து
ஏற்றுக்கொள்பவள்.. அவள்.

வயது வித்தியாசங்களின்றி
அம்மாவின் கொஞ்சலில் இன்னும்
குழந்தையாக இருக்கிறேன்.

அம்மாவின் கைக்குள் இருக்கும்
வரை, உலகம் அழகாகத்தான்
இருந்தது.. நான் முதல் முறை பார்த்த
அழகிய பெண்ணின் முக தரிசனம் என்
அம்மா நீயே...!

சுதா தர்ஷினி
தியத்தலாவை

## அன்பின் மறுவுருவம்

கடவுள் கொடுத்த வரம்
எனக்கு கிடைக்காவிட்டாலும்
அம்மாவே என் வரமாய் அமைந்தாள்.


அம்மா என்பவள் அன்பின் வடிவமாய்
பத்து மாதம் முத்தைப் போல்
பக்குவமாய் என்னை பாதுகாத்தவள்
என் முதல் தெய்வமே அம்மா...!

பாரினிலே உயர்ந்திடும் பத்தினியாம் என்
தாயே உன்னை பார்த்து அறிந்தேன்.
தாயே – பாசம் எனும் அன்புக்கடலை
நீ கனவுதனில் காணும் பெண்ணை விட
கருவினில் சுமந்த உன் தாயை நேசி

ஆயிரம் உறவுகளாய் யார் இருந்தாலும்
என் தாய்... இல்லையெனில் நான்
எப்பொழும் அநாதைதான்.
முகங்காண முதல் கருவில் சுமந்த
முதல் உறவு நீயே... தோழனால்
தந்தையை தந்த கடவுள்
என் தோழியாய் தாயை தந்துள்ளான்.
க.யானுசா
2024 உயர்தரம் கலைப்பிரிவு

# சிப்பாய் வேலுப்பிள்ளை அமரநாதனின் (ஓய்வு) இறுதிக் கிரியைகள் இராணுவ மரியாதைகளுடன் இடம்பெற்றன.



1 வது இலங்கை இலேசாயுத காலாட் படையணியில் 1955 – 1967 ஆம் ஆண்டு வரை கடமையாற்றிய சிப்பாய் வேலுப்பிள்ளை அமரநாதனின் (ஓய்வு) இறுதிக் கிரியைகள் மே 14 திகதி கொடிகாமம் குடமியான் மயானத்தில் இராணுவ சம்பிரதாயங்களுக்கு அமைய இராணுவத்தினர் மற்றும் பொதுமக்களின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது. 52 வது காலாட் படைபிரிவின் கீழ் உள்ள 521 வது காலாட் பிரிகேடின் 9 வது இலங்கை இலேசாயுத காலாட் படையணியின் படையினரால் கட்டளை அதிகாரியின் வழிகாட்டுதல்களுக்கமைய காலம் சென்ற சிப்பாய் வேலுப்பிள்ளை அமரநாதனுக்கு (ஓய்வு) மரியாதை செலுத்தப்பட்டது. அன்னார் நோய் காரணமாக தனது 89 வயதில் மே 12 காலமானார். அவர் பெற்ற பதக்கங்கள் இராணுவ இறுதிச் சடங்கில் அவரது நெருங்கிய உறவினர்களுக்கு வழங்கப்பட்டது. காலம்சென்ற சிப்பாய் வேலுப்பிள்ளை அமரநாதன் 1934 ஒக்டோபர் 28 ஆம் திகதி பிறந்தார். அவர் 1955 ஆம் ஆண்டு ஜூலை 04 ஆம் திகதி இலங்கை இராணுவத்தில் இணைந்து கொள்வதற்கு முன்னர் கொடிகாமம் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் வசித்து வந்தார். தொண்டர் படையணியில் 12 ஆண்டுகள் பணியாற்றிய அவர், 1967 ஏப்ரல் 13 அன்று பணியில் இருந்து ஓய்வு பெற்றார் என்பது குறிப்பிடதக்கதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவையுள்ளோர்க்கு தலைக்கோர் நிழல்

"யுத்தம் நிறைவடைந்து நாட்டில் அமைதி நிலைநாட்டப்பட்ட பின்னர் இலங்கை இராணுவம் வடக்கில் வாழும் தமிழ் மக்களின் இதயங்களில் நெருங்கிய உறவினர்களாகியுள்ளனர். துன்னாலை ஒரு ஏழைக் குக்கிராமமாகும். இங்கு குறைந்த வருமானம் பெறும் துன்பகரமான பல குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இராணுவம் அவர்களுக்கு உதவி செய்யும் வரை இந்தப் பகுதியில் வாழும் இந்த ஏழை மக்களின் குறைகளைக் கவனிப்பதில் எவரும் அக்கறை காட்டவில்லை. எனவே துன்னாலை பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட இந்த வறிய மக்களுக்கு இராணுவத்தினரால் வழங்கப்பட்டு வரும் ஆதரவும் தொடர்ச்சியான சேவையும் பாராட்டுக்குரியது.

எமது சமூகத்தில் வறுமையால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட பிரிவினரை இனங்கண்டு, இலங்கை இராணுவம் வீடற்றவர்களுக்கு புதிய வீடுகளை நிர்மாணித்து வடக்கின் அவசியமுள்ள மக்களுக்கு பலத்தை வழங்குகிறது. இவ்வாறாக மக்களுக்கு இராணுவம் பெருமளவிலான வீடுகளை நிர்மாணித்துள்ளமையானது, உண்மையிலேயே பாராட்டுக்குரியது.

இராணுவத்தால் நிர்மாணிக்கப்பட்ட இந்த வீட்டைப் பெற்றவர், தனது உடல் ஊனமுற்ற கணவர் மற்றும் தமக்கென சரியான நிரந்தர வீடு இல்லாமல், ஆதரவற்ற பிள்ளைகளுடன் மிகவும் கஷ்டப்பட்டவராவார். அவர் இன்று முழு வசதிகளுடன் கூடிய வீட்டிற்கு குடிபெயர்ந்திருக்கிறார். இவரின் முந்தைய தங்குமிடத்தை பார்த்த இராணுவ அதிகாரிகள், இந்த குடும்பத்திற்காக இந்த புதிய வீட்டை நிர்மாணிக்க நடவடிக்கை எடுத்தனர், அதற்காக இராணுவத்திற்கு எனது மனமார்ந்த மரியாதையையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று, இந்தப் பகுதியில் வாழும் இராணுவத்தினர் எங்களுக்குப் பாதுகாப்பை வழங்குவதோடு, தேவையான உலர் உணவுகள், பாடசாலை உபகரணங்கள், சைக்கிள்கள் போன்றவற்றை வழங்குகின்றனர். அதற்காக நாம் இராணுவத்திற்கு நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளோம். இந்த நிகழ்வில் கலந்து கொண்ட உங்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்து எனது உரையை முடிக்கிறேன்".

– பிரதேசவாசி ஒருவர் –



இராணுவத்தின் தொழிநுட்பம் மற்றும் மனிதவள ஒத்துழைப்புடனும் பூரண ஒருங்கிணைப்புடனும் குறைந்த வருமானமுடைய குடும்பங்களுக்காக புதிய வீடுகளை நிர்மாணித்து வழங்கும் 'தலைக்கோர் நிழல்' திட்டத்தின் கீழ் இதுவரை இராணுவத்தினால் நன்கொடையாளர்களின் நிதி அனுசரணையில் பலநூறு வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு அவசியமுள்ள மக்களுக்காக வழங்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம், வன்னி, கிழக்கு மற்றும் முல்லைத்தீவு எனும் பாதுகாப்புப் படை தலைமையகங்களின் கீழ் செயற்படுத்தப்படும் 'தலைக்கோர் நிழல்" திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சில வீடமைப்பு திட்டங்களின் சிறப்புத் தருணங்களை இங்கு காணமுடியும்.




யாழ்.பாதுகாப்புப் படைத் தலைமையகப் படையினர், துன்னாலையில் நன்கொடையாளரின் ஆதரவுடன் தம் 767 வது வீட்டு திட்டத்தை நிறைவு செய்தனர். மட்டக்குளி லயன்ஸ் கழகம் மற்றும் மேஜர் ஜெனரல் ரவி ரத்னசிங்கம் (ஓய்வு) ஆகியோரின் ஒருங்கிணைப்பின் மூலம் திருமதி. தபிதா சின்னையா மற்றும் வன்னி எய்ட் அமைப்பு ஆகியவற்றின் நிதியுதவியுடன் இத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கரவெட்டி துன்னாலையில் வசிக்கும் மாற்றுத்திறனாளி கணவர் மற்றும் நான்கு பிள்ளைகளுடன் கூடிய திருமதி ரதிஸ்வரன் ராஜேஸ்வரி அவர்களின் குடும்பத்திற்காக ஏப்ரல் 06 திகதி யாழ். பாதுகாப்புப் படை தலைமையக தளபதியின் தலைமையில் குறித்த வீடு வழங்கப்பட்டது. அன்றைய நிகழ்வில் கலந்துகொண்ட பிரதம அதிதியால் உலர் உணவுப் பொதிகள், சமையலறை மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் பயனாளிகளுக்குப் பரிசாக வழங்கப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மானிப்பாய்

மேஜர் ஜெனரல் ரவி ரத்னசிங்கம் (ஓய்வு) அவர்களின் ஒருங்கிணைப்பின் மூலம் கனடாவின் வசிக்கும் திரு. சின்னதுரை செந்தில்வேல் குடும்பத்தினர், காலஞ்சென்ற கட்டுடையைச் சேர்ந்த திரு.திருமதி தங்கம்மா சின்னதுரையின் நினைவாக வழங்கிய நிதியுதவி, "வன்னி எய்ட் கனடா" மற்றும் சிங்க கழகத்தின் நிதி அனுசரணைகளின் மூலம் யாழ் படைத்தலைமையகத்தினால் 768 வீடு நிர்மாணிக்கப்பட்டது. குறித்த புதிய வீடு, பொருளாதார சிக்கல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் பஃனான்டோ ரேனுஷான் அவர்களுக்கு 2023 ஏப்ரல் 6 திகதின்று கையளிக்கப்பட்டது. யாழ். பாதுகாப்பு படைத் தலைமையக தளபதியின் தலைமையில் குறித்த வீடு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டதோடு பயனாளிகள் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு பரிசுகள் மற்றும் உலர் உணவுப் பொதிகளும் இராணுவத்தினால் வழங்கப்பட்டன.



## கோலங்கலட்டி

511 வது காலாட் பிரிகேட் படையினர், சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மார்ச் 7 யாழ்ப்பாணம், கீரமலை கோலங்கலட்டி கிராம சேவையாளர் பிரிவில் வாழும் திரு. ஆறுமுகம் சந்திரசேகரம் என்பவரின் குடும்பத்திற்கு புதிதாகப் புனரமைக்கப்பட்ட வீட்டினை வழங்கி வைத்தனர். அனுசரணையாளரான திரு. வீஷ் நடராஜ் அவர்கள் யாழ். பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க இத்திட்டத்திற்கான நிதியுதவியை வழங்கினார். இந்நிகழ்வின் பிரதம அதிதியாக யாழ். பாதுகாப்பு படைத் தலைமையக தளபதி கலந்து கொண்டார்.



## இரணைபலை

இரணைபலை கிராமசேவை பிரிவில் வலயம் 05 இரணைபலை எனும் முகவரியில் வசிக்கும் தியாகராசா தம்பதியினர் நிரந்தர வருமானமின்றி தவிப்பதை கருத்திற்கொண்டு அவர்களுக்காக புதிய வீடொன்றை அமைக்கும் பணிகள் 3 (தொ) விஜயபாகு காலாட் படையணியினால் 2023 ஏப்ரல் 10ம் திகதியன்று மேற்கொள்ளப்பட்டன.



## அடம்பன்

10 வது (தொ) கெமுனு ஹேவா படையணியின் படையினரால், முன்னாள் போராளி ஒருவருக்கு தங்களுடைய சொந்த நிதியில் அவரின் இருப்பிடத்திற்கு தேவையான படுக்கையறை மற்றும் சமையலறை என்பன நிர்மாணித்து கொடுக்கப்பட்டதோடு, அவருக்கு அவசியமான அத்தியாவசிய உணவு பொருட்களும் வழங்கப்பட்டன. திரு.சின்னப்பு ஜேகுநாதன் அவர்கள் உறங்குவதற்கும் சமையல் செய்வதற்கும் வசதியில்லாத வீட்டில் வாழ்ந்து கொண்டிருந்த நிலைமையை கருத்திற் கொண்டு ஏப்ரல் 05 திகதி இப்பணி முன்னெடுக்கப்பட்டது.



## முல்லைத்தீவு

64 வது காலாட் படையின் அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் வசித்திருக்கும் திருமதி. ஜே. அந்தோனிதாஸ் மற்றும் அவரது குடும்பத்தினரின் வாழ்க்கை நிலையைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்காக 8 வது இலங்கை பீரங்கி படையினர் வெறும் 60 நாட்களுக்குள் குடிநீர், மின்சார வசதியுடன் கூடிய வீடொன்றை நிர்மாணித்தனர். 64ம் படைப்பிரிவு தளபதியின் தலைமையில் மார்ச் 5 ஆம் திகதி குறித்த வீட்டை பயனாளிக்கு வழங்கும் நிகழ்வில், அவர்களுக்கு அத்தியவசியமான பொருட்களுடன் வீடு கையளிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் சிறாரின் எதிர்காலம் வளம்பெற...!

## யாழ்ப்பாணம்



உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து யாழ். பல்கலைக்கழக மருத்துவப் பீடத்திற்கும், பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்திற்கும் தெரிவான யாழ். மாணவர்களின் சாதனைகளைப் பாராட்டிய யாழ். பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் படையினர், குறித்த மாணவர்களுக்கு மடிக்கணணிகளை பரிசாக வழங்கினர். இதற்கான 386,000.00 ரூபா நிதியுதவித்தொகை, அவுஸ்திரேலியாவில் வசிக்கும் திருமதி ஜூலி கேப்பர் (Mrs Julie Capper) அவர்களினால் வழங்கப்பட்டது. இந்த மடிக்கணினிகள் மே 14 திகதியன்று காங்கேசன்துறை தல்செவன இராணுவ விடுதி வளாகத்தில் வழங்கி வைக்கப்பட்டன




## மருதங்கேணி

10 வது (தொ) விஜயபாகு காலாட் படையினரின் ஒருங்கிணைப்பின் மூலம், அவுஸ்திரேலியாவை தளமாகக் கொண்ட "ஹெல்ப் அன்ட் ஹெல்பர் நிறுவனத்தின் அனுசரணையின் கீழ் மார்ச் 27ம் திகதி யாழ் குடாநாட்டில் மருதங்கேணி பிரதேசத்தில், தெரிவு செய்யப்பட்ட 38 குறைந்த வருமானமுடைய மாணவர்களுக்கு பாடசாலை உபகரண பொதிகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக 553 வது காலாட் பிரிகேட் தளபதி கலந்து சிறப்பித்தார்.



## அக்கராயன்குளம்

இராணுவத்தின் வேண்டுகோளின் பேரில் ஹட்டன் நஷனல் வங்கி வழங்கிய அனுசரணையின் மூலம், கிளிநொச்சி கரியாலநாகபட்டுவான் தமிழ் கலவன் பாடசாலை, அக்கராயகுளம் மகா வித்தியாலயம் மற்றும் செல்லியத்தீவு தமிழ்ப் பாடசாலை ஆகியவற்றில் கல்வி கற்கும் குறைந்த வருமானமுடைய குடும்பங்களின் 300 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் இலவசமாக வழங்கப்பட்டன. 66 வது காலாட் படைப்பிரிவின் படையினர் அந்தக் குடும்பங்களின் பொருளாதார நெருக்கடிகளை உணர்ந்து மாணவர்களிடையே இந் நன்கொடை திட்டத்தை முன்னெடுக்க ஏற்பாடு செய்திருந்தனர்.



## வள்ளிபுனம்

வள்ளிபுனம் இடைக்காடு பிரதேசத்தின் பெற்றோர்கள் மற்றும் பொதுமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க, முல்லைத்தீவு பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் 68 வது காலாட் படைப்பிரிவின் 681 வது காலாட் பிரிகேடின் 6 வது கெமுனு ஹேவா படையினர், இடைக்காடு மாணவர்களின் வகுப்பறையில் நிலவிய நெரிசலைக் குறைக்க மேலதிக வகுப்பறையொன்றை நிர்மாணித்தனர். இதற்கான ஒரு மில்லியன் ரூபாய் நிதியுதவியை கலாநிதி (திருமதி) ஷிரந்தி விக்கிரமநாயக்க அவர்கள் வழங்கியுள்ளார். இதன் திறப்பு விழா ஏப்ரல் 19 திகதி இடம்பெற்றது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வவுனியா, பெரியவளையன்கட்டு, சின்னவளையன்கட்டுப் பாடசாலையில் கல்வி கற்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த 40 மாணவர்களுக்கு பாடசாலைக் காலணிகள் அன்பளிப்பு செய்யும் நிகழ்வொன்று இடம்பெற்றது. 562 வது காலாட் பிரிகேட் தளபதியின் வேண்டுகோளுக்கு இணங்க, டி.எம் எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் திரு. ஆர்.எம் பத்திராஜா இந்நிகழ்விற்கான நிதியுதவியை வழங்கினார்.

66வது காலாட் படைப்பிரிவு தளபதியின் வழிகாட்டலின் கீழ் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள பாடசாலை மாணவ மாணவிகளுக்காக கல்விக்கருத்தரங்கு ஒன்று 2023 மே மாதம் 13 மற்றும் 14ம் திகதிகளில் கிளிநொச்சி பூநகரின் மகா வித்தியாலய வளாகத்தில் நடாத்தப்பட்டது. தேர்ச்சி பெற்ற ஆசிரியர் குழாத்தினரால் நடாத்தப்பட்ட இந்த கருத்தரங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் இலவசமாக கையேடுகள், புத்தகங்கள் என்பன வழங்கப்பட்டன.






கரவெட்டி

மஹரகம ஸ்ரீ வஜிரஞான தர்ம நிலையத்தின் பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையின் கீழ் 551 வது காலாட் பிரிகேட் படையினர், கரவெட்டி ஸ்ரீ நாரத வித்தியாலயத்தில் கல்வி கற்கும் குறைந்த வருமானமுடைய 52 மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை மே 15 அன்பளிப்பு செய்தனர். இதே நிகழ்வில் பாடசாலையிலுள்ள 19 ஆசிரியர்களுக்கு உலர் உணவுப் பொதிகள் மற்றும் ஆடைகளும் பரிசாக வழங்கப்பட்டன.

## வண்ண வண்ண பூக்கள்...

வண்ண வண்ண பூக்கள்
வடிவான பூக்கள்
கண்ணைக்கவரும் பூக்கள்
மலர்ந்து சிரிக்கும் பூக்கள்
அம்மா தலையில் இருக்கும்
கடவுள் பாதம் இருக்கும்
மாலையாகி என்றும்
மகிழ்ச்சி தரும் பூக்கள்
வாசம் வீசி எம்மை
மயங்கச்செய்யும் பூக்கள்
தேனைத்தந்து எம்மை
மகிழச் செய்யும் பூக்கள்

விஸ்மிதா
யா. கரம்பைக்குறிச்சி அ.க.த பாடசாலை

## நிலாவே வா..



நீல வான வீதியில்
நீந்தி வரும் வெண்ணிலவே..
காலமெல்லாம் வானிலே
கோலம் பல காட்டுகிறாய்.

அம்மா தரும் நிலாச்சோறு
என்றும் அமுதம் வெண்ணிலவே..
ஆம்பல் மல்லிகை மணம் வீச
பவனி வரும் வெண்ணிலவே.

சு.தனுஷ்கா
தரம் 05
யா.கரம்பைக்குறிச்சி அ.த.க பாடசாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## யாழ்ப்பாணம்

521 வது காலாட் படைப்பிரிவு படையினரால் யாழ் வரணி மத்திய மகா வித்தியாலயத்தின் கட்டிடமொன்று மறுசீரமைக்கப்பட்டு 2023 மே 17ம் திகதியன்று திறந்து வைக்கப்பட்டது. குறித்த நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் கௌரவ . எஸ் . அரவிந்த குமார்; பாராளுமன்ற உறுப்பினர், அங்கஜன் இராமநாதன் என்பவர்களோடு யாழ் பாதுகாப்பு படைத் தலைமையக தளபதி அவர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.



## கரவெட்டி

கரவெட்டி பொன்னம்பலம் வித்தியாலயத்தில் பொருளாதார சிக்கல்களுக்கு மத்தியில் கல்வி பயிலுகின்ற 25 மாணவ மாணவிகளுக்காக பாடசாலை கற்றல் உபகரணங்கள் மற்றும் 55 மாணவ மாணவியர்க்கு அவர்தம் விளையாட்டு திறன்களை மேம்படுத்தும் நோக்கத்தோடு விளையாட்டு பொருட்கள் அன்பளிப்பு செய்யும் நிகழ்வொன்று 2023 மே 19ம் திகதியன்று இடம்பெற்றது. அவுஸ்திரேலியாவின் ஸ்டெப் தொண்டு நிறுவனத்தின் நிதியுதவியின் மூலம் இராணுவத்தால் குறித்த நிகழ்வு இனிதே நடாத்தப்பட்டது.

## தச்சன மருதமடு

மடு கல்வி வலயம் மற்றும் 653 காலாட் படைப்பிரிவின் ஒருங்கிணைப்புடன் குறித்த பிரதேசத்தின் 19 பாடசாலைகளின் 456 மாணவ மாணவியரின் பங்குபற்றலுடன் 2023 மே 23 ம் திகதியன்று தச்சனமருதமடு வித்தியாலய வளாகத்தில் வெகு சிறப்பாக விளையாட்டு விழா ஒன்று நடாத்தப்பட்டது.



## உங்கள் கருத்துக்களை எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.


பாதுகாப்பு படை தலைமையகம் (யாழ்ப்பாயணம்) 021 2222112

பாதுகாப்பு படை தலைமையகம் (வன்னி) 024 2222152

பாதுகாப்பு படை தலைமையகம் (கிழக்கு) 027 2259137

பாதுகாப்பு படை தலைமையகம் (முல்லைத்தீவு) 011 3009729

இராணுவ தலைமையகம் 011 2993076

**மின்னஞ்சல்**

*ranaviruwa@yahoo.com*

**முகவரி**

இராணுவ தலைமையகம்
ஸ்ரீ ஜயவர்தனபுரம்
கொழும்பு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துதல்



## கெவிலியமடு

'கெவிலியமடு 23 மைல், புழுகுணாவை, காச்சிகொடி எனும் கிராமத்தில் வசிக்கும் கர்ப்பிணித்தாய்மார்கள் மற்றும் பிள்ளைகளின் பிணியாய்வு பணிகளை திறம்பட மேற்கொள்வதற்கு தகுதியான இடம் இல்லாமை' தொடர்பாக கெவிலியமடு குடும்ப சுகாதார அலுவலகத்தினர், இராணுவத்திடம் குறித்த நிலவரம் தொடர்பில் அறிவித்தனர். அதன் படி இராணுவத்தனர், குறித்த பிரதேசத்தில் மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்பட்ட கட்டிடமொன்றை மறுசீரமைத்து, பிணியாய்வு நிலையமாக 2023 ஏப்ரல் 07ம் திகதியன்று மக்களின் பயன்பாட்டிற்காக வழங்கினர். இங்கிலாந்தில் வசிக்கும் நதீர கஹபிட்டிய மற்றும் அவரது நண்பர்களின் நிதியுதவியின் மூலம் 11 வது சிங்கப் படையணியின் வீரர்களால் இந்த சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.



## வெற்றிலைக்கேணி

553 காலாட் பிரிகேட் படையினர் மற்றும் 12 (தொ) விஜயபாகு காலாட் படையணியினரின் ஒத்துழைப்பின் மூலம் 2023 ஏப்ரல் 30ம் திகதியன்று வெற்றிலைக்கேணி முதல் முள்ளியன் வரையிலான பாதை மறுசீரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. சிவில் மக்களாலும் இராணுவத்தினராலும் பயன்படுத்தப்படும் இந்த குன்றும் குழியுமான வீதியானது, வடமராச்சி கிழக்கின் பழைமை வாய்ந்த முள்ளியன் கோயில் வழியே வெற்றிலைக்கேணியிலிருந்து இயக்கச்சி A 9 பாதை வரை செல்வதாகும்.



## முல்லைத்தீவு

இராணுவ வீரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு தூய குடிநீர் வழங்கும் நோக்கத்தில், நாயாறு 593 வது காலாட் பிரிகேட் நுழைவாயிலில் இராணுவத்தால் அமைக்கப்பட்ட நீர் சுத்திகரிப்பு நிலையம், 59 வது காலாட் படைப்பிரிவின் தளபதி அவர்களால் ஏப்ரல் 6 ம் திகதி திறந்து வைக்கப்பட்டது.




## வடமராச்சி



ஐக்கிய அரபு இராச்சியத்தில் வாழும் இலங்கை சமூகத்தின் நிதியுதவியுடன் 55 வது காலாட் படையினர், அலியவளை தேவாலய சிலோன் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும், வடமராட்சி கிழக்கு கிராம வாசிகளுக்கும் பயன்படும் வகையில் நீர் சுத்திகரிப்பு நிலையமொன்றை நிறுவினர். இந்நிலையமானது 2023 மார்ச் 8 நடைபெற்ற திறப்பு விழாவின் போது மாணவர்கள் மற்றும் கிராம வாசிகளின் பயன்பாட்டிற்கு கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக 55 வது காலாட் படைப்பிரிவின் தளபதி கலந்து கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விளையாட்டு செய்திகள்







யாழ் பாதுகாப்பு படைத்தலைமையக தளபதியின் கருத்திற்கேற்ப யாழ் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இராணுவ கிரிக்கெட் அணியினர் மற்றும் யாழ் மாவட்ட கிரிக்கெட் அணியினர்களிடையே இடம்பெற்ற போட்டியின் இறுதியல் இலங்கை இராணுவ கிரிக்கெட் அணியினர் வெற்றி பெற்றனர். குறித்த நல்லிணக்க கிரிக்கெட் போட்டி 2023 மார்ச் 26ம் திகதி இடம்பெற்றது.

---




முல்லைத்தீவு பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் 64வது காலாட் படைப்பிரிவின் 642 வது காலாட் பிரிகேட் படையினர், இளைஞர்களின் விளையாட்டுத் திறன்களை மேம்படுத்தும் வகையில் ஒட்டுசுட்டானின் சிவில் விளையாட்டுக் கழகங்களுக்கிடையே காற்பந்து விளையாட்டு போட்டியொன்றை ஏப்ரல் 06 முதல் ஏப்ரல் 11 வரை ஏற்பாடு செய்திருந்தது. இந்த போட்டித்தொடரின் முடிவில் வளர்மதி விளையாட்டுக் கழக வீரர்கள் வெற்றி பெற்றனர். இத்தொடரின் இறுதிப் போட்டி மற்றும் வெற்றிக்கிண்ணங்கள் வழங்கும் நிகழ்வு, ஏப்ரல் 11ஆம் திகதி ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக 64 வது காலாட் படைப்பிரிவின் தளபதி அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

---


14 வது இலங்கை சிங்கப் படையணியின் கட்டளை அதிகாரியின் மேற்பார்வையில் வர்த்தகர்களான மகாலிங்கம் தயாபரன் மற்றும் திரு. இராமசாமி கணபதிப்பிள்ளை அவர்களின் அனுசரணையில் சிவில் கிரிக்கெட் அணிகளுக்கிடையே போட்டித் தொடரொன்றை 14 வது இலங்கை சிங்கப் படையினர் ஏற்பாடு செய்திருந்தனர். இறுதிப்போட்டியில் முத்து விநாயகபுரம் விளையாட்டுக்கழக அணியும் பழம்பாசி விளையாட்டு அணியும் மோதியதுடன் பழம்பாசி விளையாட்டு அணி சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. கிரிக்கெட் போட்டிக்கான அனுசரணை முல்லைத்தீவை சேர்ந்த திரு.மகாலிங்கம் தயாபரன் மற்றும் திரு.இராமசாமி கணபதிப்பிள்ளை ஆகியோர் வழங்கினர். ஏப்ரல் 8 ம் திகதி இடம்பெற்ற இறுதி போட்டியில் 64 வது காலாட் படைப்பிரிவின் தளபதி பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



5 வது இயந்திரவியல் காலாட் படையணியினரால் 2023 மார்ச் 22 திகதியன்று தம் அதிகார பிரதேசத்தில் வசித்திருக்கும் சிவில் மக்கள் மற்றும் இராணுவத்தினரிடையே நல்லிணக்கத்தை விருத்தி செய்யும் நோக்கத்தோடு, நட்புறவு கிரிக்கெட் போட்டி ஒன்று நடாத்தப்பட்டது. அதன்படி KN 65 பள்ளிக்குடா கிராமசேவை பிரிவின், தெளிகரை கிராமத்தின் கலையொளி விளையாட்டு கழகத்தின் கிரிக்கெட் அணியினரும் 5 வது இயந்திரவியல் காலாட் படையணியினருக்கும் இடையே இடம்பெற்ற கடும்போட்டியின் இறுதியில் இராணுவ அணியினர் வெற்றி பெற்றனர்.

---






66 வது காலாட் படையணியினரின் அதிகார எல்லையில் வசிக்கும் மக்களுக்கும் இராணுவத்திற்குமிடையே 2023 மார்ச் 19 திகதியன்று தொன் பொஸ்கோ தொழில் கற்கை பயிற்சி நிலையத்தில் கரப்பந்தாட்ட போட்டியொன்று நடாத்தப்பட்டது. குறித்த போட்டியில் 11 (தொ) கஜபா படையணி கரப்பந்தாட்ட குழுவினர் வெற்றி பெற்றனர்.

---






பாதுகாப்பு படைகள் மற்றும் புதுகுடியிருப்பு மக்களிடையே நல்லிணக்கத்தை மேம்படுத்தும் நோக்கில் 68 வது காலாட் படையினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சமூகங்களுக்கிடையேயான காற்பந்தாட்ட போட்டித்தொடரின் இறுதிப்போட்டி 2023 மே 27 திகதியன்று புனித அந்தோனியார் மைதானத்தில் இடம்பெற்றது. காற்பந்தாட்ட போட்டித்தொடரின் 12 அணியினர் போட்டியிட்டதோடு இறுதி போட்டிக்கு புனித அந்தோனியார் விளையாட்டு கழகம் மற்றும் புதுகுடியிருப்பு கிழக்கு சுபிர் ரேன்க் காற்பந்தாட்ட குழுவினர் தெரிவாகினர். குறித்த போட்டியில் ஆறுக்கு நான்கு கோல்கள் என்ற கணக்கில் புனித அந்தோனியார் விளையாட்டு கழகத்தினர் வெற்றியிட்டினர். குறித்த விளையாட்டு போட்டியை கண்டு களிப்பதற்காக 68 வது காலாட் படைப்பிரிவு தளபதி அவர்களுடன் இராணுவ அதிகாரிகள், பிரதேச மதகுருமார்கள், சிவில் கழக உறுப்பினர்கள் மற்றும் பெருந்திரளான சிவில் மக்கள் கலந்து கொண்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் ஒருங்கிணைப்பில் நடமாடும் மருத்துவ முகாமொன்று...!






கிழக்கு பாதுகாப்பு படை தலைமையகத்தின் 22 வது காலாட் படைபிரிவின், 222 காலாட் பிரிகேடின் அதிகார எல்லையில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள இனங்களைச் சேர்ந்த 250க்கும் மேற்பட்டோர், இராணுவத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நடமாடும் மருத்துவ முகாமின் மூலம் மருந்துகளையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொண்டனர். இந்த முகாமின் மூலம், 252 இலவச கண்ணாடிகள் மற்றும் 27 செயற்கை கால்கள் பொதுமக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. அதே வளாகத்தில் நடந்த நீரிழிவு நோய் சிகிச்சையில் 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இத்திட்டத்தின் போது, அப்பகுதியில் வசிக்கும் மாற்றுத்திறனாளி இராணுவ வீரர்களுக்கு நான்கு செயற்கை கால்களும் பகிர்ந்தளிக்கப்பட்டன. இந்நிகழ்வில் 22 வது காலாட் படைபிரிவின் தளபதி மற்றும் 222 வது பிரிகேட் தளபதி ஆகியோருடன் "கொழும்பு நண்பர் சமூக" அமைப்பின் திட்ட முகாமையாளர் திரு. எஸ்.எம்.எஸ் பண்டார அவர்கள் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டார்.

# விசேட தேவையுள்ளவருக்கு உதவிக்கரம்.



சுகந்திபுரம்

வைசாக பௌர்ணமி தினத்தை முன்னிட்டு 48 சுகந்திபுரம் கிராமசேவை பிரிவில் வசிக்கும் 7 அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்தில், பிறந்தது முதல் நடக்க முடியாத விசேட தேவையுள்ள 15 வயதுடைய ஜீவன்குமார் தனுஷ் என்பவருக்கு, 9 வது இலங்கை தேசிய பாதுகாப்பு படையணினரால் சக்கர நாட்காலி மற்றும் உலர் உணவு வழங்கும் நிகழ்வொன்று நடாத்தப்பட்டது.

# வாழ்வை வென்றிட வலுவொன்று



பொன்னாலை

யாழ் பாதுகாப்பு படைத் தலைமையக சிவில் ஒருங்கிணைப்பு அலுவலகத்தினால் ரூ.35000.00 பெறுமதியான இரு ஆடுகள் ; குறைந்த வருமானமுடைய ஜே 208, பொன்னாலை, கட்டுவான் பிரதேசத்தில் வசிக்கும் சுப்பிரமணியம் அவர்களுக்கு 2023 மார்ச் 01 திகதி அன்பளிப்பு செய்யப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறமைக்கோர் மேடை



## குட்டி அணில்...!

அழகு மிக்க பிள்ளையே..
அங்கும் இங்கும் ஓடியே..
பழங்கள் தேடிப்பறிக்கிறாய்
பையப் பையக் கொறிக்கிறாய்.

வளைத்து வாலைத் தூக்குவாய்
மரத்தின் உச்சி ஏறுவாய்
கிளைகள் தோறும் தாவுவாய்
கெடுதி ஏதும் செய்திடாய்

மூன்று கோடு முதுகிலே
முன்பு இராமர் தந்ததோ?
நான்கு முகத்து பிரம்மனால்
நன்கு படைக்கப்பட்டதோ?

கேட்ட கேள்வி கேட்டதும்,
கிச்சாக் கிச்சாக் என்கிறாய்..
ஓட்டம் பிடிக்க பார்க்கிறாய்..
ஒளிந்து கொள்ள நினைக்கிறாய்...!

இர. சஞ்சீவினி
பெரியபண்டிவிரிச்சான் மகா வித்தியாலயம்

## என் தெய்வங்கள்

கடவுளுக்கும் அப்பாவிற்கும் சிறு வித்தியாசம்
தான் உண்டு - என்னவென்றால்
கண்களுக்கு தெரியாதவர் கடவுள்.
கண்களுக்கு தெரிபவர் அப்பா.

"தான் பட்ட கஷ்டத்தை பிள்ளைகள்
அனுபவிக்க கூடாது" என்று எண்ணுபவர் அம்மா.
ஆனால் எந்தக் கஷ்டத்தை பிள்ளைகள்
அனுபவிக்க கூடாது என நினைப்பவர் அப்பா.

ஈரைந்து மாதங்கள் கருவிலே சுமந்தவர்
கருவிற்கு உயிரூட்டும் அம்மா - ஆனால்
ஆயுள் தோறும் தோளிலே சுமப்பவர்
உணர்விற்கே உயிரூட்டும் அப்பா.

எவ்வளவு துன்பங்கள் தன்னிடம் இருந்தாலும்
ஆயுள் முழுவதும் எனக்கு மகிழ்ச்சியை
அளிப்பவர்கள் என் பெற்றோர்களே..
எவ்வளவு துன்பம் வந்தாலும் எனக்கு
எந்த துன்பத்தையும் தந்திடாத
என் தெய்வங்களை என்றும்
போற்றி மகிழ்ச்சியுடன் காப்பாற்றுவேன்.

எஸ். கலைப்பிரியா

வாழ்க்கையில் எதுவும் நிரந்தரமில்லை என்பதை உணர்ந்தவன் துன்பத்தை கண்டு துவண்டு விழுவதும் இல்லை. இன்பத்தை கண்டு துள்ளி குதிப்பதும் இல்லை. – ஆர். சர்மிளன்




T. விதுஷன் தரம் 01




V. தருஷன்

கிளி/ செல்லியதீவு தமிழ் கலவன் பாடசாலை



S. திலுஷியா

சித்து பாலர் பாடசாலை, புதுகுடியிருப்பு



S. நவிதுஷான்

சித்து பாலர் பாடசாலை, புதுகுடியிருப்பு



S. கயல்கிரன்

கிளி/ செல்லியதீவு தமிழ் கலவன் பாடசாலை



பிரதிப் அகர்வின்

தரம் 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவம்

**இக்கவித்துளிகள் வீட்டை மறந்து நாட்டை நேசிக்கும்
இராணுவ வீரர்களுக்கு சமர்ப்பணமாகுக!!!**

மிடுக்குடன் சீருடை அணிந்து, நெஞ்சை நிமிர்த்தி
உருக்கும் பனியிலும், கொட்டும் மழையிலும், உயர்
தூணிலும், உயிர் கொடுத்து பணி புரியும் வீரனுக்கு
இரவுக்கும் பகலும் வித்தியாசங்கள் தெரியாது.

சுவையற்ற உணவு உண்டாலும்..
புழுதி தரையில் படுத்தாலும் உருண்டாலும்..
பழையகால கனவுகள் நீண்டாலும் ..
மனதெல்லாம் கவலைகள் பற்றிக் கொண்டாலும்..
அகன்ற மார்புடைய வீரனுக்கு வருவது
என்னவோ அழைப்பு மட்டுமே..

தாயையும் மனைவியையும் பிரிந்து வாடும் போது...
தொப்பியும் துப்பாக்கியும் மனைவியாய் மனதோடு...
கட்டிப்பிடிக்கும் நெஞ்சத்திற்கு தூக்கம் மட்டுமே
பஞ்சம்...!

நாட்டை காக்கும் பணியில் நான்
என் தாயை மறந்தேன்..
உடன் பிறந்தோரை மறந்தேன்..
மணந்த மனைவியை மறந்தேன்..
குளித்த கிணற்றை மறந்தேன்..
நண்பர்களை மறந்தேன், பிரிந்தேன்.
இவையனைத்தும் என்
நாட்டிற்காகவே செய்தேன்.

எங்கிருந்தாலும்
எம் இமைகள்
மூடாது, இதயத்தில்
இலங்கையிருப்பதால்
எம் சுவாசத்தில் சுயநலம்
இருக்காது – உதிரத்தில்
என் நாட்டின் உணர்வு
இருப்பதால்

உறை பனியையும் தாங்கும்
துணிவு...! உலர்ந்த
பாலையாய் மதியத்தின்
உணர்வு
குவளை நீரில்
முடிகின்றது இரவு...!

பிறந்த தேசத்திற்காக இழக்கும் என்
உயிரை – இருபத்தொரு குண்டுகள்
முழங்க புதைப்பதில் அக மகிழ்வேன்!

புதைந்த என் தேகத்தில் பூக்கள் தூவி
"தன்னை ஈன்ற தேசத்திற்காய்
இறந்தவன் என் மகன்" எனும்
தாயின் மொழிகேட்டு இன்னும்
மகிழ்ந்திடுவேன்...!

உதிரத்தில் உறைந்த என் உணர்வுகள்
புதைந்து கிடக்கும்
என் உயிர் சமர்ப்பணம்
எனை ஈன்ற தாய்நாட்டிற்கே..!

பெண் சிப்பாய் விதூஜா
பாதுகாப்பு படை தலைமையகம் (கிழக்கு)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org